**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070320236087

Volume: 7

Issue: 3

Month: January

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.11.2022

Accepted: 12.12.2022

Published: 01.01.2023

Citation:
Kathiramalai, Kavitha, and M. Balakailasanathasarma. "Saivism Is the Religion in Which Shiva Is Worshiped as the Supreme Deity." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 3, 2023, pp. 21–28.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i3.6087

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Saivism is the Religion in which Shiva is Worshiped as the Supreme Deity

**Kavitha Kathiramalai,** ***M.Phil (R)***
*Final Year Student, Department of Hindu Civilization*
*Faculty of Hindu Studies, University of Jaffna, Sri Lanka*

**M. Balakailasanathasarma**
*Head, Senior Lecturer Sanskrit*
*University of Jaffna*

**Abstract**
"Saivism is the religion in which Shiva is worshiped as the supreme deity." Saivism is associated with Shiva and is eternal with the divine power and resources associated with nature beyond. The greatness of time has been praised by scholars, sages and religious leaders from time to time. Saivism gives the highest definition of "Exalted Shaivaism".

"We have got this body
In order to worship God and gain pleasure"

NallainagarArumukhanavalar, who was the originator of Saivism in Eelam, made the development of Saivism. Olavaiyar says that "rare human being" is the best born human being. Similarly Naukarasar also said that "Humanity is what we want in this state". The ultimate goal of human life is coexistence with the Almighty. In the revolving wheel of life every human being has to achieve his own ideal. To live a good life, to live well, to live well in the soil, vegetarianism guides. Man should live with the best values to live as a human being. Saiva rituals are one of those characteristics. Rituals give fullness to a man's life. Etiquette takes precedence in Saivism. It is the main duty of Saivas to maintain it properly. Research is the exercise of knowledge to discover truth. In this way, the kriyapadam of Shivagams are based on Shivadeetha. Among the Agamas, Moolagams like Kamikagam, Ajithagam, Vathulagam, MrigendraAgam, Karanagam and Pattadi texts like Agorasivacharya, SomasambuPattadi, etc., Elaborate on Sivadeetsha.Ditsha is the main rite and path to salvation followed by all religions. These Saiva philosophies are no exception to this, Deetsa is considered as a method of imparting penance and wisdom to the Sadhaka or disciple by the Deetsa Guru. It is understood as removing ignorance and giving truth. One cannot become a Saiva if he is born in Saivism. Saiva etiquettes in their life A true Saiva is a person who observes Saiva morals. These symbols of Shiva are worn and praised by Saivites who worship Lord Shiva. Therefore, to wear these symbols and to praise them, all those who are born as Sivarai must first receive Deetsh according to the Shivagam system.

**Key Words:** Deetshai, Sivagam, Dothra Texts, Pattati, Kriyakramajyothi, Deetshaviti, Asaram

**References**
1. Arumuga Navalar, *Saiva Vinavidai*, P.13.
2. Indumakkalukku Oru Kaiyedu, Akila Ilangai Indumaamandram, P.75.
3. Kanthasathyathasan-Saivapulavar, Saivakalvi Parampariyam, Saivapulavargalin Pangallipu, P.113-114.
4. Manohan, T, Indu Nagareegam, Akila Ilangai Indumaamandram, P.140.
5. Saivasamayatheetchai Kurippu Puthagam, Akila Ilangai Indumaamandram, P.13.

6. Padmanaban, S., Sivaagamarabu Nilaithanavum Azhithanavum, P.119.
7. Thirumoolar, Thirumanthiram, Kaasithirumadam, Thirupananthaal, P.88.
8. Kalkudaa Kannaki Amman Alayam, Katturai, pp.3-9.
9. Padmanaban, S., Sivagama Marabu, Nilaithanavum Azhithanavum, pp.32-40.
10. Ganakumran, N., Saivasithantha thelivu, P.74.
11. Manoharan, T., Indhu Nagareegam Veliyeedu, Akila Ilangai Indhu Maamandram, P.29.
12. Thilainathan, S., Saivavum Namum, Kolumbu, P.4.
13. Thirunavukarasu Sivasithambaram, Iriyiyal Thathuvamum Vazhipadum Muraigalum, Palani Aantha Illam, 2001, P.65.
14. Indu Nagaareegam Vezhiyeedu, Akila Ilangai Inthamaamandram, 204, P.138.
15. Iraiyiyal Thathuvamum Vazhipadum Muraigalum, Mezhiyoor Saivapulavar Sivasithambaram Thirunavukarasu, Palani Anantha Illam, 2001, P.5.
16. Sivapathasundaram, S., Saivakriyai Vilakkam, Saivaparipalana Sabai, Yazhpanam, pp.35-36.
17. Indu Makkalukku Oru Kaiyedu, Agila Ilangai Indumaamandram, pp.59-61.

# தீட்க்ஷையினுடைய சிறப்புக்களும், நடைமுறை வாழ்வில் பேணுதகமை

*திருமதி கவிதா கதிரமலை*
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

*முனைவர் ம. கைலாசநாதர்சர்மா*
தலைவர், மூத்த விரிவுரையாளர், சமஸ்கிருதம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச் சுருக்கம்**

*சைவம் என்பது சிவனை முழுமுதற்கடவுளாக போற்றப்படும் சமயமாகும். சைவம் சிவசம்பந்தமானது அப்பால் இயற்கையோடு இணைந்த தெய்வீக சக்தியையும் வளங்களையும் கொண்டு நித்தியமானது. காலத்தின் மிகத்தொன்மை என்பது காலந்தோறும் அறிஞர்களாலும் ஞானிகளாலும் சமயப்பெரியார்களாலும் போற்றப்பட்டு வருகின்றது. சைவம் மேன்மைகொள் சைவநெறி என்ற உயர்ந்த விளக்கத்தைத் தருகின்றது.*

***இந்த சரீரம் நமக்குக் கிடைத்தது நாம்***
***கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்***

*ஈழத்து சைவமறுமலர்ச்சிக்கு வித்திட்டவராகிய நல்லைநகர் ஆறுமுகநாவலர் சைவவாழ்வை மேம்பாடு அடையச் செய்தார். தீட்க்ஷை என்பது எல்லா சமயங்களாலும் எடுத்தாளப்படும் முக்கிய சடங்காகவும், முக்திக்கான மார்க்கமாகவும் உள்ளது. இச் சைவ மெய்யியல்களும் இதற்கு விதிவிலக்கல்ல தீட்ஷா குருவால் ஸாதகனுக்கு அல்லது சீடனுக்கு தவத்தையும், ஞானத்தையும் அளிக்கும் முறையாகத் தீட்க்ஷை எடுத்தாளப்படுகின்றது. இது அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைத் தருவது எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. சைவசமயத்தில் ஒருவர் பிறந்துவிட்டால் மாத்திரம் அவர் சைவராகிவிட முடியாது. தமது வாழ்வில் சைவ ஆசாரங்கள் சைவ ஒழுக்கங்களைக் கடைப்பிடிப்பவரே உண்மைச் சைவராவர் சிவநெறி நிற்கும் சைவர்களுக்கு உரிய சிவசின்னங்கள் வீபூதி, உருத்திராக்கம், சிவபஞ்சாட்சரம் என்பனவாகும். இச் சிவசின்னங்கள் சிவபெருமானைக் குறித்து நிற்பன சைவமக்களால் இவை அணியப்பெற்றும், துதிக்கப்பெற்றும் வருபவை. எனவே இச்சிவ சின்னங்கள் அணிவதற்கும், துதிப்பதற்கும் முதலில் சைவராய்ப் பிறந்தோர் அனைவரும் சிவாகம முறைப்படி தீட்க்ஷை பெற்றுக்கொள்ள வேண்டும்.*

***முக்கியச் சொற்கள்:*** *தீட்க்ஷை, சிவாகமம், தோத்திர நூல்கள், பத்ததி, கிரியாக்ரமஜோதி, தீட்ஷாவிதி, ஆசாரம்*

## அறிமுகம்

இலங்கையில் சைவர்களில் பெரும்பாலானோர் தீட்க்ஷை பெறுகின்றனர் ஆரம்பகாலங்களில் வாழ்ந்த பெரியார்கள் அதற்கு வழிகாட்டியாக இருந்துள்ளனர். உதாரணமாக ஆறுமுகநாவலரைக் குறிப்பிடலாம். இவர் தனது சொற்பொழிவுகளிலும், பிரசங்கங்களிலும்,துண்டுப்பிரசுரங்களிலும் சைவசமயத்தவர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று கூறியுள்ளார். சைவசமயத்தவர்கள் ஒவ்வொரு வரும் உண்மைச் சைவராக வாழ வேண்டும். அசைவ உணவு முதலான மாமிசம் புசிக்கக்கூடாது. மது அருந்தக்கூடாது. நெற்றியில் திருநீறணிந்து சிவசின்னங்களுடன் திகழ வேண்டும், என்றும் தனது பிரசங்கத்தில் கூறியுள்ளார். சைவசமயத்தின் தொன்மை, கடவுள் வடிவங்களின் தத்துவக் கருத்துக்கள் சிவசின்னங்களின் மகிமை, சைவசமயத்தவரின் ஒழுக்கவிதிகள் இம்மை மறுமைப் பயன்கள், தீட்க்ஷையின் புனிதம் சிறப்புத்தன்மை போன்றன முக்கிய விடயங்களாக அமைந்தன. இப் பிரசங்கத்தைக்

கேட்ட சைவசமயத்தோர் பலர் மாமிசம் உண்பதையும் மதுபானம் அருந்துவதையும் கைவிட்டனர். முறையாக சிவதீட்ஷை பெற்று கோயிலுக்குச் சென்று தோத்திரம் பாடச் சென்றனர். சைவாச்சிரம தர்மங்களைக் கடைப்பிடித்தனர். மேலும் James Carimam என்பவர் தன்னுடைய induism in Ceylon என்ற நூலில் யாழ்ப்பாணத்துச் சைவர்களிடம் பூணூல் அணியும் பழக்கமும் சிவதீட்ஷை பெறும் வழக்கமும் இருந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து ஈழத்தவர்கள் ஆரம்ப காலங்களிலேயே நடைமுறை வாழ்வில் தீட்ஷை பெற்றுள்ளனர். அத்தோடு சிவசின்னங்களையும் பேணி அணிந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

தற்காலத்தில் ஈழத்தைப் பொறுத்தவரையில் தீட்ஷையின் வகிபாகம் பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபட்ட நிலையில் காணப்படுகின்றது. அப் பிரதேசத்தின் கலாசாரம் பண்பாடுகளின் அடிப்படையில் தீட்ஷை பெறும் வீதம் அதிகரித்தும் குறைந்தும் காணப்படுகின்றமையை அவதானிக்கலாம். இந்துக்கள் செறிவாக வாழும் வடக்கு மாகாணம், மற்றும் கிழக்கு மாகாணப் பகுதிகளில் தீட்ஷையின் சிறப்புக்களும் செல்வாக்கும் ஏனைய மாவட்டங்களை விடவும் அதிகமாக உள்ளது என்று கூறலாம். அப் பிரதேசத்தில் உள்ள ஆலயத்திலேயே ஆலய குருக்களால் தீட்ஷை அளிக்கப்படுகின்றது. மேலும் இந்துசமய நிறுவனங்கள் ஆதீனங்கள் மடங்கள், அருள்நெறி திருக்கூட்டம் சிவத்தொண்டன் சபை, இளந்தொண்டர் சபை, பாடசாலைகள் சைவ ஆகசிரமங்கள் ஊடாகவும் தீட்ஷை வழங்கப்பட்டு நடைமுறை வாழ்வில் பேணப்படுகின்றது. சைவ சமயத்தில் ஏழுவயதில் தீட்ஷை பெற வேண்டும் என்ற சிறப்புவிதி கூறப்பட்டுள்ளது. எனினும் இலங்கையைப் பொறுத்தமட்டில் தீட்ஷையின் முக்கியத்துவத்தை நோக்கினால் தீட்ஷை பெறுவதற்கு வயதெல்லை வரையறை இல்லாமையைக் காணமுடிகிறது. இறந்த பிரேதத்திற்கும் தீட்ஷை வைப்பதை உதாரணமாகக் கொள்ளலாம்.

**தீட்ஷை**

தீட்ஷை என்பது மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது. அதாவது அஞ் ஞானத்தைப் போக்கி மெஞ்ஞானத்தை தருவது மேலும் தீட்ஷை பெற்றவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நியதிகள் உள்ளன. இதனை சிவாகமங்களும், ஆறுமுக நாவலரின் சைவ வினாவிடை நூலும் எடுத்துரைக்கின்றன. தீட்ஷை பெற்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களை அநுட்டானம் என்பர். இவ்வொழுக்கங்களிலே நீராடல், சந்தியா வந்தனம், செபம், தியானம் குரு சேவை, சிவனடியார் சேவை, சரியைத் தொண்டு முதலியன அடங்கும். சந்தியாவந்தன வழிபாட்டில் நீராடல் சிறிதளவு தூய நீரை உட்கொள்ளலாகிய ஆகமம் மூச்சை உள்ளே இழுத்து சிறிது நேரம் நிறுத்திவைத்து ஒழுங்குமுறைப்படி மூச்சுப்பயிற்சி செய்ய விடுதலாகிய பிரணாயாமம் மந்திர செபம், தியானம் போன்ற அனுட்டானங்கள் இடம்பெறும் சமயதீட்ஷை பெற்றவர்களிற்கு பஞ்சாட்சர மந்திரம் ஓதுதல் மிகவும் முக்கியமானதாகும். மேலும் அநுஸ்டானம் செய்யும் போது விபூதியை திரிபுண்டரமாகத் தரித்தல் வேண்டும். அத்துடன் தீட்ஷை பெற்றவர்கள் தம் பொது வாழ்க்கையில் கொல்லாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை முதலிய இயம ஒழுக்கங்களையும் தவம், இறைநம்பிக்கை, ஈகை முதியோர் வணக்கம் மெஞ்ஞான சிந்தனை, செருக்கின்மை நன்மை தீமைகளைப் பிரித்தறிதல் முதலிய நியம ஒழுக்கங்களை கடைப்பிடித்தல் பஞ்சபுராணம் ஓதுதல், புராண பாராயணம் செய்தல் ஆலயத் தொண்டு செய்தல், ஆலய வழிபாடு போன்ற நற்கருமங்களிலும் ஈடுபடல் வேண்டும். இத்தகைய செயல்களைத் தீட்ஷை பெற்ற ஒருவன் கட்டாயம் ஆற்ற வேண்டும். இல்லையேல் பெற்ற தீட்ஷை பயனற்றுப் போகும். மேலும் தீட்ஷை பெற்றவர்கள் மாமிச உணவை புசித்தல் ஆகாது அந்த வகையில் ஈழத்தில் தீட்ஷை பெற்ற ஒருவன் மேற்குறிப்பிட்டபடி வாழ்கின்றானா? என்பது

ஐயத்துக்குரியதாகும். குருவானவர் அனைவருக்கும் தீட்ஷை அளிப்பதில்லை ஓர் ஆன்மா ஆன்மீக உயர்நிலை காண தயார்நிலையில் இருப்பதைக் கண்டு அதற்கு மட்டுமே குருவால் தீட்ஷை வழங்க முடியும். எனினும் தற்காலங்களில் மனிதன் தனது நோக்கத்தை அடையும் பொருட்டு தீட்ஷை பெறுவதை அவதானிக்கலாம். இவ்வாறு தீட்ஷை பெற்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நியதிகளை சரியான முறையில் கடைப்பிடிப்பதில்லை. சைவர்களாக இருக்க வேண்டியவர்கள் அசைவர்களாக இருக்கின்றனர். கட்டாயம் தீட்ஷை பெற வேண்டும் என்று எந்த ஒரு சைவசமய இலக்கியங்களிலும் குறிப்பிடவில்லை. ஒருவரது வற்புறுத்தலால் தீட்ஷை பெற வேண்டிய அவசியமும் இல்லை. தீட்ஷை என்பது ஞானம் என்னும் வேள்விக்கு ஊற்றப்படும் நெய் தீட்ஷை அகவுலகுக்கு தரப்படுவது புறவுலகுக்கு அல்ல அவ்வாறு பெறப்படும் தீட்ஷையால் எந்தவொரு பயனும் கிட்டப் போவதில்லை.

**சிவதீட்ஷை நடைமுறை வாழ்வில் பேணுதகமை**

ஈழத்தில் மேலும் தீட்ஷை வழங்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் இன்றும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. சைவர்களுக்கு இன்று ஈழத்தில் சமய சம்பந்தமான பரீட்சை எழுதுவதற்கு முன்பாக முதல் தகுதியாக தீட்ஷை பெற வேண்டும். தீட்ஷை பெற்ற பின்னர் தான் பரீட்சை எழுத முடியும் என்று உறுதியாக நடவடிக்கை எடுத்துள்ளனர். உதாரணமாக சைவப்புலவர் தேர்வு, இளஞ் சைவப்புலவர், பிரவேச பண்டிதர், பால பண்டிதர், சித்தாந்த பண்டிதர், தர்ம ஆசிரியர் இளந்தொண்டர் சபையில் சித்தாந்த ரத்தினம், திருநெறிச் செல்வர் பட்டம் பெறும் பயிலுநர்கள் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகளில் ஒன்றாக சிவதீட்ஷை பெற்றிருத்தல் வேண்டும் என்பதையும், சிவ தீட்ஷையினுடைய முக்கியத்துவமும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஈழத்தில் வருடா வருடம் பலர் இவ்வாறான பரீட்சைகளிற்கு தோற்றுகின்றனர். அந்தவகையில் பல சைவர்கள் தீட்ஷை பெறுகின்றனர். மேலும் ஈழத்தில் பல நிறுவனங்கள் சைவர்களுக்கு தீட்ஷை அளிப்பதை நோக்காகக் கொண்டு இயங்குகின்றன. உதாரணமாக சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தை குறிப்பிடலாம். இந் நிறுவனம் தனது குறிக்கோள்களில் முக்கியமான ஒரு குறிக்கோள்களாக தீட்ஷை வழங்குதலைக் கொண்டுள்ளது. இன்றுவரை இந் நிறுவனம் இப்பணியைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றது.

தீட்ஷை வழங்கும் நிறுவனங்களின் பல்வேறு பிரதேசத்தில் சமய நிறுவனங்களுடாக தீட்ஷை வழங்கப்படுகின்றன அவற்றில் ஒன்றாக நல்லை ஆதீனம் சிறப்பிடம் பெறுகிறது. 1977ஆம் ஆண்டு ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளால் ஐப்பசி வெள்ளி, கந்தசஷ்டி போன்ற விசேட தினங்களில் தீட்ஷை வழங்கப்பட்டுள்ளது. அன்று முதல் இன்று வரை தீட்ஷை வழங்கும் நிறுவனமாக சிறப்பிடம் பெறுகின்றது நல்லை ஆதீனம். ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார் சுவாமிகளின் ஆசியோடு 2000ஆம் ஆண்டு 22 மாணவர்களுக்கும் 2001-39 மாணவர்களுக்கும் சமயதீட்ஷை அன்று முதல் இன்று வரை சைவப்புலவர் சங்கத்தால் வழங்கப்பட்டு வருகின்றது. தீட்ஷை என்றால் உயிரைப் பற்றிய ஆணவமலத்தைக் கெடுத்து சிவஞானத்தைக் கொடுப்பது என்று பொருள், தமிழில் தீட்ஷை, உடலுக்குப் பல சடங்குகள் செய்யப்படுகின்றன. அது போல உயிராகிய ஆன்மாவிற்குச் செய்யக் கூடிய சடங்கே தீட்ஷையாகும். எவ்வாறு வாகனம் ஓட்ட ஓட்டுனர் உரிமம் தேவையோ நிலம் வாங்க நிலப்பதிவு அவசியமோ, தொழில் துவங்க தொழில் உரிமம் தேவையோ அது போல சிவசம்பந்தம் எனும் ஆரம்பப்படி நிலையை உறுதிப்படுத்திக்கொள்ள இம்மை மறுமை இன்பங்கள் அடைய சிவபெருமான் திருவருள் பெற உரிமம் (தீட்ஷை) தேவை. எந்த வயதினரும் (7வயது முதல்) எந்த வயதிலும்

ஆண், பெண் இருபாலரும் தீட்ஷை பெறலாம் என நடைமுறை வாழ்வில் தீட்ஷை முக்கிய சிறப்புப் பெறுகிறது. தீட்ஷை பெறாதவர் பொதுச்சைவர் எனப்படுவார். அவர்கள் திருநீற்றை நீரில் குழைத்து திரிபுண்டரமாக அணியமுடியாது, நமசிவாய எனும் மிக உயர்ந்த மந்திரமான ஐந்தெழுத்தை உச்சரிக்க முடியாது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது தான் சைவம் காட்டும் நெறி எனவே குரு மூலம் தீட்ஷை பெறவேண்டும். நமது சமய குரவர்களும் சந்தான குரவர்களும் நமக்கு அருளியது அதுவே. அவர்கள் அருளியதே நமக்கு பிரமாணம். ஸ்ரீ இராமனுக்கும் அகத்தியரும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு உபமன்சு முனிவரும் தீட்ஷை செய்து வைத்துள்ளனர். ஏன் தீட்ஷை பெற வேண்டும் அதன் முக்கியத்துவம் சிறப்புக்களை நோக்கில் சிவ பெருமானை ஆகமங்களில் விதித்தபடி வழிபாடு செய்வதற்கு உரிய அதிகாரம் பெற்று ஐந்தெழுத்து ஓதி முப்பரிமாணமாக திருநீறு அணிந்து பூசை செய்யவும் தீட்ஷை பெற்றால் ஞானம் பெறலாம்

### சிவதீட்ஷையின் சிறப்புக்கள் ஏன் தீட்ஷை பெறவேண்டும்?

சிவாகம மரபில் தீட்ஷை என்பது மிக முக்கியமான கிரியையாகும். சிவாகமங்களின் கிரியாபாதமே சிவதீட்ஷை பற்றி எடுத்தியம்புகின்றன. தீட்ஷை என்பது மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது. நமது உடம்பின் புறஅழுக்கை நீரினால் சுத்தம் செய்வதுபோல உள்ளிருக்கும் சூக்கும உடம்பினையும் அதில் உள்ள தீய அழுக்குகளையும் ஆசமனம், மந்திரசெபம் முதலான அனுட்டானக் கிரியைகளினாலேயே போக்கமுடியும். இவற்றினைச் செய்வதற்கு வேண்டிய பயிற்சியும், முயற்சியும் தேவை அதனை உணர்ந்தே நம் சமயத்தில் ஏழுவயதில் தீட்ஷைபெற வேண்டும் என்ற விதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் கால் கைகளை அடக்கி ஆளும் பக்குவமும் மனதில் இச்சைகள் தோன்றி விருத்தியாகக் கூடிய காலமும் அப்பருவ காலத்தில் இருந்து தான் தோன்றுகிறது என்பதனாலேயே அவ் வயதில் தீட்ஷை பெற்றிருந்தால் அனுட்டான சாதனங்களினால் தேகத்தையும் மனத்தையும் அடக்கி நம் வசப்படுத்தவும் தீச்செயலும் தோன்றாமலும் தடுக்கமுடியும். சிவதீட்ஷை பெற்று சைவசமயிகளாக வாழ்வதால், குருபக்தி சிறக்கும், தெய்வவழிபாடும், தெய்வ நம்பிக்கையும் சிறக்கும், சைவ விழுமியங்கள் சிறக்கும், வினைகள் குறையும் முத்தி கிடைக்கும், சிவசின்னங்களின் மகிமையும், புனிதத்தன்மையும் சிறந்து விளங்கும், இறைவன் தீட்ஷா கிரியையின் மூலம் மட்டுமே பாவமன்னிப்பு அருளுகிறார், சமய தீட்ஷை பெற்றால் அவர்களை எமன் அணுகமாட்டான். அதனால் நரகம் இல்லை அவ்வுயிரை வாங்க ஸ்ரீ கண்ட பரமேஸ்வரன் அதிகாரம் பெற்றவர், விஷேட தீட்ஷை பெற்றால் அவ்வுயிரை அனந்ததேவர் வாங்குவார், நிர்வாண தீட்ஷை பெற்றால் சதாசிவமூர்த்தி வாங்குவார், நமது வாரிசுகள் நமக்கு பிதிர்க்கடன் ஆற்றாவிட்டாலும்கூட ஆவியுலக இன்னல் இல்லை, இறைவன் தீட்ஷா கிரியையின் மூலம் மட்டுமே பாவமன்னிப்பு அருளுகிறார், பிராணாயாமம் செய்யும்போது இருதய நோய் வராது மாரடைப்பு நெருங்காது, சிவாகம பாவங்கள் மூலம் மனம் அடங்கும். நிம்மதி கிட்டும். ஐம்பொறிகளும் நமக்கு குற்றேவல் புரியும் அப்பர் பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி என்ற திருத்தாண்டகப் பாடல்வரி மூலம் பாவனை உயிரைத் தூய்மைப்படுத்தும், தீட்ஷை பெற்று ஆன்மார்த்த பூஜை செய்வதன் மூலம் நமது வினைகள் குறையும். இறைவனைக் காணும் வழிகாண நமக்கான குருவிடம் தீட்ஷை பெறவேண்டும். நமக்கான குருவை தேர்ந்தெடுக்க இயலாதபட்சத்தில் சிவபக்தியும் முறையான சிவவழிபாடும் நாம் கொண்டிருந்தால் அகத்தியரே நமக்கு குருவாயிருந்து நமக்கான குருவை அடையாளம் காட்டி சிவதரிசனம் பெற வழிகாட்டுகிறார்.

சிவதீட்ஷையின் ரகசியம் கற்ற அகத்தியர் தீட்ஷை பற்றி சிறப்பிக்குமிடத்து சித்தர்களின் தலையாய சித்தர் அந்த பரம்பொருளின் பிரியத்துக்குரிய அகத்திய மாமுனி பாமரனும் தகுதி இருந்தால் இறைவனை அடையலாம் என்பதற்காகப் பகிர்ந்துகொண்ட தேவரகசியம், சித்தரகசியம் இவை இவற்றை உணர்ந்து சித்தியடைந்தவர்களுக்கு ஞானம் பெருகும் பாவம் விலகும் என்கிறார். மேலும் ஆதி சித்தனான சிவனின் பாததரிசனம் கிடைக்குமாம். இந்த தீட்ஷைகளை நற்குமாரனான முருகப்பெருமான் தனக்கு அருளியதாகவும் கூறுகிறார். அகத்தியர் அருளியவை முப்பத்திரண்டு சிவதீட்ஷைகள் குருவிடம் இருந்து பெறப்படும் உபதேசங்களில் முதன்மையானதும் இந்த சிவதீட்ஷைகள் தான் இந்த தீட்ஷைகளை முறையாக குருவின் மூலமாய் பெற்று செபிக்க தீட்ஷைகள் சித்திக்கும் என்கிறார் அகத்தியர். அகத்தியார் அருளிய மந்திரங்களை செபிக்கும்போது குறிப்பிட்ட மந்திரங்களுக்கு முன்னர் ஓம் என்கிற பிரணவத்தையும் சேர்த்தே செபிக்க வேண்டுமென தெளிவாகக் கூறியிருக்கிறார். சில மந்திரங்கள் ஓம் என்று துவங்கினால்கூட அதற்கு முன்னர் இன்னொரு ஓம் சேர்த்து இருமுறை ஓமென செபித்தே மந்திரம் சொல்ல வேண்டும் எனவே மந்திரம் எப்படி இருந்தாலும் துவக்கத்தில் பிரணவ மந்திரத்துடனே அகத்தியர் அருளிய அனைத்து மந்திரங்களையும் செபிக்க வேண்டும். சிவதீட்ஷை என்பது கன்ம நீக்கத்தினையும் மலநீக்கத்தினையும் ஏற்படுத்துவது என்பதனை சிவயாம்புவ ஆகமத்தின் பிரமாணத்தினைக் கொண்டு தெளிவுபடுத்தப்படுகின்றது. காஷ்மீர சைவத்தில் தீட்ஷை பற்றி விரிந்த விளக்கம் போதியளவு காணமுடியாதுவிடினும் பேணுகின்றனர். சைவ ஆசாரமாக வாழும் சைவப்பூசாரிகள் பரம்பரை அந்தணச் சிவாச்சாரிய பரம்பரையினர் பேணுகின்றனர். தீட்ஷை பெறுவதையும் பூணூல் சடங்கு செய்யும் விதிமுறைகளையும் மேற்கொண்டு சைவகைங்கரியங்கள் மேற்கொள்வதற்கு தீட்ஷை பெறுகின்றனர். பின்னர் விபூதி உருத்திராக்கம் திருவைந்தெழுத்து இவை சிவசின்னங்களாக பேணி அணிகின்றனர். கிரியை மார்க்கத்திற்கு நாம் செல்லும்போது நாம் பெறுகின்ற தீட்ஷை விஷேட தீட்ஷையாகும். ஞானமார்க்கத்தில் நாம் காலடி வைக்கும்போது குரு நமக்கு வழங்கும் தீட்ஷை நிர்வாண தீட்ஷையாகும். ஆதார தீட்ஷை, நிராதார தீட்ஷை என இரு வகைப்படும். இறைவன் ஞானாசிரியர் ஒருவர் மூலம் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடைய நம் போன்ற சகலருக்கு அளிக்கும் தீட்ஷை ஆதார தீட்ஷை எனப்படும். இறைவன் வேறோர் ஆதாரத்தையும் வேண்டாது தானே குருவாய் நின்று ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்கள் மட்டும் உடைய பிரளயாகலருக்கு முக்தியளிக்கும் தீட்ஷை நிராதார தீட்ஷை ஆகும். திருவாவடுதுறை திருத்தலத்தில் திருமூலர் திருமந்திரத்தைப் பாடினார். இங்கே சித்தாந்த சைவ ஆதீனத்தை நிறுவியவர் ஸ்ரீநமசிவாய தேசி கராவார். அருணந்தி சிவாச்சாரியாரிடம் தீட்ஷை பெற்ற சித்தர் சிவப்பிரகாசர் நமசிவாய எனும் தீட்ஷாநாமத்தைச் சூடினார். இன்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து சிவதீட்ஷை பெறுவதற்கு திருவாவடுதுறை ஆதினத்திற்கு சென்று வருகின்றனர். ஆறுமுகநாவலருக்கு நாவலர் எனும் பட்டம் தீட்ஷா நாமம் வழங்கி கௌரவிக்கப்பட்ட ஆதீனமாகும். சைவசமயத்தினர் தீட்ஷைபெற்று நித்திய வழிபாடும் வீட்டில் குருவழிபாடும் செய்து நன்நெறியுடன் வாழ்கின்றனர். குரு என்ற சொல்லுக்குப் பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பவர் என்பது பொருள். பக்குவம் அடைந்த ஆன்மாக்களுக்கு குருதீட்ஷை மூலம் முக்தி கொடுக்கின்றார். இறைவனும் குருவாக - ஞானகுருவாக வருவதனாலும் நாம் குருவை இறைவனாக மதித்தே வழிபாடு

செய்ய வேண்டும். தட்ஷிணாமூர்த்தி வடிவம் கொண்டதும் குருவாம் தன்மையாலே.

### நிறைவுரை

தொகுத்து நோக்கில் தீட்ஷை பெறுவதனால் ஒரு சைவசமயி புனிதமாகிறான். பூர்வ, அபரக்கிரியைகள், சைவ கைங்கரியங்கள் செய்வதற்குத் தகுதியைப் பெறுகின்றான். சிவப்பிரமாண குலத்திலுதித்த ஒருவரே பரார்த்தக் கிரியைகளை நடத்திவைக்கும் தகுதியுடையவர் எனச் சிவாகமங்கள் புகழுகின்றன. அவர்களும் முறைப்படி சமய, விஷேட, நிர்வாண தீட்ஷைகளையும் பெற்று ஆசாரியாபிஷேகத்தையும் செய்தவர்களாக இருக்க வேண்டும் என்பது விதி. அன்மார்த்தமாகச் சிவபூசைகளைச் செய்ய விரும்பும் அடியார்களும் தீட்ஷை பெற்றுக்கொள்ள வேண்டும். முறைப்படி சிவசின்னங்களை அணிந்து நடைமுறை வாழ்வில் பின்பற்ற வேண்டும். இக்கண்ணோட்டத்தில் சைவசமய மரபில் தீட்ஷை முதலம்சம், சிவாச்சாரியார் முதற்கொண்டு சைவசமயிகள் வரை தீட்ஷை வழங்கப்படுவதைக் காணுகிறோம்.

### அடிக்குறிப்புக்கள்

1. ஆறுமுகநாவலர் சைவ வினாவிடை, ப. 13
2. இந்துமக்களுக்கு ஒரு கையேடு- அகில இலங்கை இந்து மாமன்றம், ப. 75
3. கந்தசத்தியதாசன் - சைவப்புலவர், சைவக்கல்வி பாரம்பரியமும், சைவப் புலவர்களின் பங்களிப்பும், பக்.113-114
4. த.மனோகரன், இந்துநாகரிகம் வெளியீடு, அகில இலங்கை இந்துமாமன்றம், ப-140
5. சைவசமயதீட்ஷை குறிப்புப் புத்தகம், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், பக்.1-13
6. பத்மநாபன்.ச., சிவாகமமரபு நிலைத்தனவும் அழிந்தனவும், ப.119.
7. திருமூலர், திருமந்திரம், காசித்திருமடம், திருப்பனந்தாள், ப.88
8. கல்குடா கண்ணகி அம்மன் ஆலயம், கட்டுரை, பக்.3-9
9. பத்மநாபன்.ச, சிவாகமமரபு, நிலைத்தனவும் அழிந்தனவும், பக்.32-40
10. ஞானகுமாரன். நா., சைவசித்தாந்தத் தெளிவு, ப.74.
11. த.மனோகரன், இந்துநாகரிகம் வெளியீடு, அகில இலங்கை இந்துமாமன்றம்,ப.29
12. தில்லை நாதன். எஸ்., சைவமும் நாமும், கொழும்பு, ப-4
13. திருநாவுக்கரசு சிவசிதம்பரம், இறையியல் தத்துவமும் வழிபடும் முறைகளும், பழநி ஆனந்த இல்லம், 2001, ப-65
14. திருநாவுக்கரசு சிவசிதம்பரம், இறையியல் தத்துவமும் வழிபடும் முறைகளும், பழநி ஆனந்த இல்லம், 2001,ப-66
15. திருநாவுக்கரசு சிவசிதம்பரம், இறையியல் தத்துவமும் வழிபடும் முறைகளும், பழநி ஆனந்த இல்லம், 2001,68
16. இந்துநாகரிகம், வெளியீடு அகில இலங்கை இந்தமாமன்றம், 2014,ப-138
17. இறையியல் தத்துவமும் வழிபடும் முறைகளும், மேழியூர் சைவப்புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு, பழநி ஆனந்த இல்லம்.2001, ப.5
18. சிவபாதசுந்தரம்.சு., சைவக்கிரியை விளக்கம், சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம். பக்35-36
19. பத்மநாபன்.ச., சிவாகமமரபு, ப.55.
20. இந்து மக்களுக்கு ஒரு கையேடு, அகில இலங்கை இந்துமாமன்றம், பக்-59-61
21. இறையியல் தத்துவமும் வழிபடும் முறைகளும், மேழியூர் சைவப்புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு, பழநி ஆனந்த இல்லம்.2001,ப-8
22. சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்.சு., சைவசமய தத்துவம்,பக்-46-47
23. மகாலிங்கம். சிவ, சமய வாழ்வியல், ப-23
24. தில்லைநாதன். எஸ்., சைவமும் நாமும், ப-149